# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109733

1. District : மாவட்டம் Vellore PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 23/2021 Date: நாள் 29.12.2021

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: 7 & 12 of PC Act 1988
   (ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்: as amended in PC
   (iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 28.12.2021
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Prior to 17.10 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.12.2021 Time : நேரம் 03.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume - III Time : நேரம் 29.12.2021 @ 03.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Joint Registrar/ Managing Director, The Vellore
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி District Consumers Co-operative wholesale Stores Ltd., No. C.1435, Anna Salai, Vellore-1
   South direction about 1 km.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் A. Vasugi (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 years (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Senior Revenue Inspector (g) Address : முகவரி O/o the District Inspection Cell office, Collectorate Campus, Vellore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)
   A1) Tmt. B. Renugambal, Joint Registrar/Managing Director
   A2. Tr. S. Shanmugam, Superintendent (I/c), Purchase section.
   A3. Tr. S. Naveenkumar, Junior Assistant, purchase section of Vellore District Consumer Co-operative wholesale stores Ltd. No. C.1435, Vellore.
   A4. Tr. M. Seenivasan, Manager, Jaya Soap, No. 16/16, Kizhanchipattu Village, Rettichavadi post, Cuddalore

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ..........—.......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS....................—........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29.12.2021 | [signature] 29/12/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.12.2021 @ 05.00 hrs

Name: பெயர் ........S.VIJAY........
Rank: நிலை ......................No. எண் ..........
INSPECTOR OF POLICE, VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE.

**Submitted:**

**Column (12) in Vellore Vigilance and Anti Corruption Crime No.23/2021 u/s u/s 7 and 12 of Prevention of Corruption Act 1988 as amended in the Prevention of Corruption (Amendment) Act 2018**

எதிரிகள்

A-1 திருமதி.B.ரேணுகாம்பாள்.(55/2021) த/பெ.பாஷா, இணை பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர், வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., எண்.சி.1435

A-2 திரு.S.சண்முகம் (57/2021), த/பெ.K.V.சக்கரபாணி, கண்காணிப்பாளர் (பொறுப்பு), கொள்முதல் பிரிவு, வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., எண்.சி.1435

A-3 திரு.S.நவீன்குமார் (36/2021) த/பெ.சங்கர், இளநிலை உதவியாளர், கொள்முதல் பிரிவு, வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., எண்.சி.1435

A-4 திரு.M.சீனிவாசன் (46/2021), த/பெ.மோகன், மேலாளர், Jaya Soap, நெ.16/16, கீழாஞ்சிபட்டு கிராமம், ரெட்டிசாவடி அஞ்சல், கடலூர் மாவட்டம்.

இன்று 29.12.2021-ஆம் தேதி 03.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திருமதி.அ.வாசுகி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் என்பவர் நிலையம் சேர்ந்து கொடுத்து புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர், அ.வாசுகி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், வேலூர்-9. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் தற்போது வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நேற்று 28.12.2021-ஆம் தேதி மாலை சுமார் 15.15 மணியளவில், நான் அலுவலகத்தில் இருந்தபோது, வேலூரில் உள்ள கற்பகம் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., எண்.சி.1435 அலுவலகத்தில் பணிபுரியும் இணை பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.B.ரேணுகாம்பாள் என்பவர், கற்பகம் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., மொத்தமாக பொருட்களை சப்ளை செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கு நிலுவையில் உள்ள தொகைகளை விடுவிக்கவும், எதிர் வரும் 2022 ஆங்கில வருட புத்தாண்டு முன்னிட்டும் பரிசு பொருட்களையும் பணத்தையும் லஞ்சமாக பெறுவதாகவும், மேலும் ஒப்பந்தாரர்கள் மற்றும் பொருட்களை வினியோகம் செய்பவர்கள் லஞ்சமாக பணம் கொடுத்து நிலுவை தொகை பெறுவதாகவும் அதனை

அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அவர்களின் பதவியை துஷ்பிரயோகம் செய்து நேர்மையற்றவகையில் பெற்றுக்கொள்வதாகவும் கிடைத்த நம்பகமான தகவலினை நான் என்னுடைய நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.விஜய் அவர்களுக்கு 28.12.2021-ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு தகவல் தெரியப்படுத்தினேன். அதன் பேரில், நான், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் அரசு வாகனத்தில் புறப்பட்டு, வேலூர் அண்ணாசாலை, நெ.32-ல் என்ற முகவரியில் அமைந்துள்ள கற்பகம் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., எண்.சி.1435 உள்ள இணை பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.15 மணிக்கு வந்து சேர்ந்து மேற்படி அலுவலகத்தை தொடர்ந்து கண்காணிக்க அலுவலகத்தின் தரைதளத்தில் விநாயகர் கோயில் பக்கத்தில் TN-96-H-3333 சிகப்பு நிற Hyundai Creta என்ற கார் ஒன்று நின்றுகொண்டிருந்தது. மேற்படி அலுவலகத்தின் கிழக்கு நோக்கிய முதல் தளத்தில் வடக்கு திசையில் தெற்கு பார்த்த வாயிற்படி கொண்ட அறையின் வெளிப்புறத்தில் இணை பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் என்ற பெயர் பலகை பொருத்தப்பட்டிருந்து, அந்த அறையினை கண்காணித்தபோது, இணை பதிவளார் / மேலாண்மை இயக்குநர் திருமதி.B.ரேணுகாம்பாள், அவர்கள் அவருடைய இருக்கையில் அமர்ந்திருந்தார் அவருக்கு எதிரே உள்ள இருக்கையில் சுமார் 45 வயது மதிக்கதக்க நபர் ஒருவர் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். மேற்படி சுமார் 45 வயது மதிக்கதக்க நபர் இணை பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் அலுவலக அறையில் இருந்து மாலை சுமார் 16.55 மணிக்கு புறப்பட்டு கீழே சென்றுவரை பின்தொடர்ந்து சென்று கண்காணிக்க அந்த நபர் கீழே நிறுத்தப்பட்டிருந்த சிகப்பு நிற Hyundai Creta TN-96-H-3333 என்ற வாகனத்தின் அருகில் வந்து நின்று அவருடைய அலைபேசியில் யாரிடமோ பேசிக்கொண்டிருந்தார். பின்னர் மாலை சுமார் 17.10 மணிக்கு மேற்சொன்ன காரில் ஏற முற்பட்டவரை தடுத்து அந்த நபரிடம் இரு துறை திடீர் சோதனைக்குழுவினரான நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, அவரை விசாரிக்க, அவர் தன் பெயர் திரு.M.சீனிவாசன் எனவும் தான் Jaya Soap, என்ற நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிவதாகவும், மேற்படி நிறுவனம் Tamilnadu Government Co-operative Supplier Ponvandu Soap எனவும் தான்னுடைய முகவரி நெ.126/4, புதுகிராமம், கோவில்பட்டி மெயின் டவுன், கோவில்பட்டி என கூறினார். அவரை அழைத்துக்கொண்டு முதல் தளத்தில் உள்ள இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் அவர்களின் அறைக்கு மாலை சுமார் 17.15 மணிக்கு வந்து அங்கிருந்த நபரிடம் இருதுறை திடீர் சோதனை குழுவினரான நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, அவரை விசாரிக்க அவர் தன் பெயர் B.ரேணுகாம்பாள், என்றும் தான் ஒருங்கினைந்த வேலூர் மாவட்டத்தில் உள்ள கற்பகம் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்.,ன் ஒன்பது கிளைகளுக்கும் இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநராக கடந்த 21.08.2020

முதல் பணிபுரிந்துவருதாகவும் சொல்லி தன்னை பற்றி அறிமுகப்படுத்தினார். பின்னர், திருமதி. B.ரேணுகாம்பாள், என்பவரிடம் இருதுறை திடீர் சோதனை குழுவினரான நாங்கள் எங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து, எங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து காண்பித்து பின்னர் திருமதி. B.ரேணுகாம்பாள், அவர்களின் அலுவலக அறையை சோதனை செய்ய, அந்த அறையில் மாதிரிக்காக அளிக்கப்பட்ட முந்திரி பருப்பு பாக்கெட்டுகள் இருந்தன, பணம் மற்றும் வேறு பொருள்கள் ஏதும் இல்லை. மேற்படி இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் திருமதி. B.ரேணுகாம்பாள், அவர்களின் Hand Bag-யை சோதனை செய்ய அதில் ரூபாய் 7,100/- இருந்தது அது குறித்து அவரிடம் கேட்க அவர் அந்த பணம் தனது செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரு.7,100/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் அலுவலக அறைக்கு வெளியே இருந்த சிறிய கணினி அறையில் இருந்த நபரை விசாரிக்க அவர் தன் பெயர் S.சண்முகம் என்றும் தான் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்.,ல் கண்காணிப்பாளராக, கொள்முதல் பிரிவில் பணிபுரிவதாக கூறியவரை திரேக சோதனை செய்ய அவரிடம் இருந்த மணிபர்சில் பணம் ரு.1970/- இருந்தது அதுகுறித்து கேட்க அந்த பணம் தனது அவசர தேவைக்காக வைத்திருப்பதாக கூறியதின்பேரில் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் திரு.சண்முகம் அவர்களின் பேன்டின் வலது பக்க பாக்கெட்டை சோதனை செய்ய அதில் இரண்டு காக்கி நிற கவர் இருந்தது அதில் ஒரு கவரை பார்க்க பணம் இருந்தது அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரு.10,000/- இருந்தது, மற்றொரு கவரை திறந்து பார்க்க அதிலும் பணம் இருந்தது, அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரு.3000/- இருந்தது, மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்க அவர் Jaya Soaps, மேலாளர், திரு.M.சீனிவாசன் அவர்கள் இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் அவர்களை சந்திக்க வந்தபோது தன்னிடம் இரண்டு கவர்களை கொடுத்ததாகவும் அதை தான் வாங்க மறுத்துவிட்டதாகவும், அப்போது அவர் M.D. Tmt.ரேணுகாம்பாள் தன்னிடம் கொடுக்க சொல்லி கூறியதாக சொன்னபோதும், தான் மறுத்துவிட்டதாகவும் மீண்டும் திரு.சீனிவாசன் அவர்கள் M.D. Tmt.ரேணுகாம்பாள் அவர்களிடம் தெளிவாக பேசிவிட்டதாகவும் அதில் ரூபாய் 10,000/- உள்ள கவர் தனக்கு என்றும் ரூபாய் 3000/- உள்ள கவர் திரு.நவீன்குமார் என்பவரிடம் கொடுக்க சொல்லி கொடுத்ததாக சொன்னார். எனவே திரு.சண்முகம் அவர்கள் வசம் இருந்த லஞ்சமாக பெற்ற பணம் ரூபாய் 13,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அங்கிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தன் பெயர் நவீன்குமார் என்றும் தான் இளநிலை உதவியாளராக Purchase Section –ல் பணி செய்வதாக கூறினார். அவரை திரேக சோதனை செய்ய அவருடைய பேன்ட் பாக்கெட்டில் ஒரு காக்கி நிற கவர் இருந்தது அதில் கத்தையாக பணம் இருந்தது, அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூபாய் 50,000/- இருந்தது. அந்த பணம்

குறித்து திரு.நவீன்குமார் அவர்களிடம் கேட்க, அவர் தான் மாலை அலுவலகத்தில் இருந்தபோது சுமார் 16.00 மணிக்கு இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் அவர்கள் தன்னை அவருடைய அறைக்கு அழைத்தாகவும், தான் அங்கு சென்றபோது திரு.M.சீனிவாசன், மேலாளர், Jaya Soap, அவர்கள் அமர்ந்து திருமதி.ரேணுகாம்பாள் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தாகவும், அப்போது MD Tmt.ரேணுகாம்பாள் அவர்கள் தன்னை பார்த்து திரு.சீனிவாசன் அவர்கள் கொடுக்கும் கவரை வாங்கி வைத்துக்கொள் என்று சொன்னதாகவும், உடனே திரு.சீனிவாசன் அவர்கள் ஒரு காக்கி நிற கவரை தன்னிடம் கொடுத்து ரூபாய் 50,000/- உள்ளது என்று சொன்னதாகவும், தான் அந்த காக்கி நிற கவரை வாங்கி அதில் பணம் உள்ளதா என்று பார்த்து தன்னுடைய பேன்ட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டதாகவும் சொன்னார். எனவே திரு.நவீன்குமார் அவர்கள் வசம் இருந்த திருமதி.ரேணுகாம்பாள் அவர்களுக்கு திரு.சீனிவாசன் என்பவரால் கொடுக்கப்பட்ட லஞ்ச பணம் ரூபாய் 50,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.M.சீனிவாசன், என்பவரை விசாரிக்க அவர் தான் நெ.16/16, கீழாஞ்சிபட்டு கிராமம், ரெட்டிசாவடி அஞ்சல், கடலூர் மாவட்டத்தில் செயல்படும் ஜெயா சோப் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்துவருவதாகவும், மேற்படி நிறுவனம் Tamilnadu Government Co-operative Supplier என அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம் என்றும் அதில் பொண்வண்டு சோப்பை மதுரை, திருவண்ணாமலை, ஒருங்கிணைந்த வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள கற்பகம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., சப்ளை செய்துவருவதாகவும், அதில் மொத்த விநியோகம் செய்யும் தொகையில் ஒரு சதவிகிதம் தனக்கு கமிஷனாக கிடைப்பதாகவும் கூறினார். பின்னர் அவரிடம் என்ன காரணத்திற்காக இவ்வலுவலகம் வந்துள்ளீர்கள் என்று கேட்க அதற்கு அவர் பொண்வண்டு சோப் மற்றும் பவுடர் ஆகியவை இந்த அலுவலகத்திற்கு விநியோகம் செய்தவகையில் சுமார் ரூபாய் 13,75,000/- நிலுவையில் உள்ளதாகவும், மேற்படி தொகை பெறவேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளவும் வருகின்ற ஆங்கில வருட பிறப்பு முன்னிட்டு மரியாதை நிமித்தமாக இணை பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் மற்றும் இத்துறையை சார்ந்த ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட ஊழியர்களை சந்தித்து டைரி, இனிப்பு மற்றும் அன்பளிப்பு கொடுப்பதற்காக வந்ததாக தெரிவித்தார். பின்னர் திரு.சீனிவாசன் அவர்களிடம் கீழே நிறுத்தப்பட்டுள்ள TN-96-H-3333 என்ற பதிவு எண் கொண்ட சிகப்பு நிற Hyundai Creta கார் குறித்து கேட்க அதற்கு அவர் தான் பணிபுரியும் ஜெயா சோப் நிறுனத்திற்கு சொந்தமான கார் எனவும் அது தற்போது தன்னுடைய பயன்பாட்டில் உள்ளதாக தெரிவித்தார். பின்னர் அவரை திரேக சோதனை செய்ய அவரின் பேன்ட் பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது, அதை எண்ணிப்பார்க்க பணம் ரூ.19,000/- இருந்தது, அதுகுறித்து கேட்க, அவர் தான் கோவில்பட்டியில் இருந்து வருவதாகவும், மேற்படி நிறுவனத்தின் சார்பாக பல ஊர்களுக்கு செல்ல வேண்டி இருப்பதாலும், காரின் எரிபொருள் செலவு மற்றும் தங்கும்

செலவிற்காக வைத்துள்ள பணம் என்று கூறினார், அவர் கூறிய காரணம் ஏற்க தக்கவகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.19,000/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி கணினி அறைக்கு எதிரே இருந்த நிர்வாக பிரிவில் இருந்த (1) திருமதி.ரஜினி, பொறுப்பு பொது மேலாளர், (2) திருமதி.லதா, காசாளர், (3) திருமதி.மாலா, இளநிலை உதவியாளர், (4) திருமதி.மங்கையம்மாள், கண்காணிப்பாளர், (5) திருமதி.மேரி ஜோஸ்லின் சாந்தி, அலுவலக உதவியாளர், (6) திரு.முருகன், தட்டச்சர், (7) திரு.சண்முகம், கண்காணிப்பாளர், (8) திரு.S.பாலாஜி, இளநிலை உதவியாளர், (9) திரு.R.ஜான் கிருபாகரன் தனி நபர் ஆகியோரை விசாரித்து சோதனை செய்து அவரவர் வைத்திருந்த தொகைக்கு உண்டான தக்க முகாந்திரம் கூறியதால் அவரவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் திரு.சீனிவாசன் அவர்களை அழைத்துகொண்டு தரைதளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த TN-96-H-3333 என்ற பதிவு எண் கொண்ட சிகப்பு நிற Hyundai Creta காரிடம் வந்து அந்த காரிடம் நின்றிருந்த நபரை விசாரிக்க அவர் தன் பெயர் எல்லப்பன் என்றும் தான் ஓட்டுனராக திரு.சீனிவாசன் அவர்களிடம் வேலை செய்வதாக கூறினார். அவரை திரேக சோதனை செய்ததில் அவரிடம் ரூபாய் 350/- இருந்தது அதுகுறித்து அவரிடம் கேட்க அது தனது தேவைக்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி காரை சோதனை செய்ய காரின் ஓட்டுனர் இருக்கைக்கு பக்கத்தில் உள்ள இருக்கையின் கீழ் Love Food என்ற எழுத்துக்களுடன் ஆப்பிள் பொம்மையுடன் ஒரு பக்கத்தில் மட்டும் அச்சிடப்பட்ட வெள்ளை நிற காட்டன் துணி பை ஒன்று இருந்தது, அதனை எடுத்துபார்க்க அதில் சிறிய மற்றும் பெரியதுமான மஞ்சள் நிற துணி பைகள் இரண்டு மற்றும் பணம் கத்தையாக இருந்தது. அந்த பணம் எவ்வளவு உள்ளது என்று திரு.சீனிவாசன் அவர்களிடம் கேட்க அவர் அதற்கு மௌனமாக இருந்தார். அதில் இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க பணம் ரூ.23,900/- இருந்தது. மேலும் இரண்டு மஞ்சள் நிற பைகளில் ஒன்றை பார்க்க அதில் "கோவில்பட்டி நாடார் உறவின்முறைச் சங்கம், கோவில்பட்டி-628501, Regd.No.S.23/55, (தொலைபேசி)-220788, அருள்மிகு பத்திரகாளியம்மன் திருக்கோவில், சித்திரை திருவிழா அருட்பிரசாதம்" என்று அச்சிடப்பட்ட துணிபையை சோதனை செய்ய அதில் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணம் எவ்வளவு உள்ளது என்று திரு.சீனிவாசன் அவர்களிடம் கேட்க அவர் அதற்கு மௌனமாக இருந்தார். அதை எண்ணிப்பார்க்க பணம் ரூ.1,50,000/- இருந்தது. மற்றொரு சிறிய மஞ்சள் பையை எடுத்து பார்க்க அதில் "அருள்மிகு பத்திரகாளியம்மன் துணை கோவில்பட்டி நாடார் உறவின்முறைச் சங்கம், கோவில்பட்டி-628501, Regd.S.23/55, (தொலைபேசி)-220788, அருள்மிகு பத்திர காளியம்மன் திருக்கோவில், சித்திரை திருவிழா அருட்பிரசாதம்" என்று அச்சிடப்பட்ட துணிபையை சோதனை செய்ய அதில் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணம் எவ்வளவு உள்ளது என்று திரு.சீனிவாசன் அவர்களிடம் கேட்க அவர் அதற்கு மௌனமாக இருந்தார். அதை எண்ணிப்பார்க்க பணம் ரூ.8,100/- இருந்தது. ஆக மூன்று

பைகளில் மொத்த பணம் ரூ,1,82,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.சீனிவாசன் அவர்கள் எவ்வித முகாந்திரம் கூறாமலும் மௌனமாகவும் இருந்தமையால் உரிய கணக்கு காட்ட இயலாத மேற்படி தொகை ரூ.1,82,000/- மற்றும் அத்தொகை இருந்த மூன்று துணி கைப்பைகள் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் என்ன காரணத்திற்காக வைத்துள்ளீர்கள் என்று மீண்டும் திரு.சீனிவாசன் அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் ஆங்கில புது வருட பிறப்பு முன்னிட்டும் ஊழியர்களுக்கு அன்பளிப்பு அளிக்க வைத்துள்ளதாகவும் மற்றும் தொழில் நிமித்தமாக வைத்திருந்த பணம் என்று கூறினார். மேலும் திருமதி.ரேணுகாம்பாள் அவர்களின் அரசு வாகனமான TN-23-CQ-0220 என்ற பதிவு எண் கொண்ட Scorpio காரை சோதனை செய்ய அந்த வாகனத்தில் பணமோ மற்றும் வேறு பொருள்களோ ஏதும் இல்லை, மேலும் மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் திரு.பிரவீன் என்பவரை திரேக சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.500/- இருந்தது அதுகுறித்து அவரிடம் கேட்க அது தனது தேவைக்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் திருமதி. B.ரேணுகாம்பாள் அவர்களிடம் அலுவலக வருகை பதிவேடு, திரு.சீனிவாசன் அவர்களுக்கு நிலுவையில் உள்ள தொகை குறித்த விவரம் மற்றும் அலுவலக Cashier Chitta Book போன்றவற்றை கேட்க அவர் பொது மேலாளர் பொறுப்பு திருமதி.ரஜனி அவர்கள் மூலம் அலுவலக வருகை பதிவேட்டினையும், திரு.சண்முகம், கண்காணிப்பாளர் மற்றும் திரு.நவீன்குமார், இளநிலை உதவியாளர், கொள்முதல் பிரிவு ஆகியோர் மூலம் நிலுவை தொகை குறித்த ஆறு எண்ணிக்கையிலான Tax Invoice –கள் முறையே Bill No.0095/21-22, 0096/21-22, 0097/21-22, 0098/21-22, 0099/21-22, 0102/21-22 ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல்களையும், Cashier Chitta Book – ன் 23.12.2021 முதல் 28.12.2021 வரையிலான கணக்கு புத்தகத்தின் பக்கங்களை சான்றொப்பமிட்டு கணக்காளர் திருமதி.லதா அவர்கள் மூலம் ஆஜர் செய்தார். மேற்படி ஆவணங்கள் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,45,000/- குறித்து இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் திருமதி. B.ரேணுகாம்பாள் அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் திரு.சீனிவாசன், மேலாளர், Jaya Soap, Tamilnadu Government Co-operative Supplier Ponvandu Soap அவர்கள் 28.12.2021 ந்தேதி மாலை தன்னை அலுவலகத்தில் வந்து சந்தித்து நிலுவையில் இருந்த அவர்கள் விநியோகம் செய்த பொருட்களுக்கான நிலுவை தொகையினை விடுவிப்பு செய்ய தன்னிடம் பேசிவிட்டு பின்னர் ஆங்கில வருட பிறப்பு 2022 முன்னிட்டு அன்பளிப்பாக ஒரு டைரி கொடுத்ததாகவும், அதனை தான் தன்னுடைய அலுவலக கொள்முதல் பிரிவு இளநிலை உதவியாளர் திரு.நவீன்குமார் என்பவரை அழைத்து அவரிடம் கொடுக்க சொன்னதாகவும், திரு.நவீன்குமார் அவர்கள் அதனை பெற்றுக்கொண்டு தன்னுடைய அறையிலிருந்து வெளியே சென்றார் என்றும், திரு.சீனிவாசன், திரு.நவீன்குமார் மற்றும்

திரு.சண்முகம் ஆகியோரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். 28.12.2021 அன்று மாலை சுமார் 17.10 மணிக்கு இருதுறை திடீர் சோதனை செயல்முறை வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., எண்.சி.1435 அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 29.12.2021 அன்று 00.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சோதனையில் திரு.சண்முகம், கண்காணிப்பாளர், கொள்முதல் பிரிவு அவர்கள் வசமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் ரூ.13,000/-ம், திரு.நவீன்குமார், இளநிலை உதவியாளர், கொள்முதல் பிரிவு அவர்கள் வசமிருந்து திருமதி.ரேணுகாம்பாள் அவர்கள் சொன்னதின் பேரில் திரு.சீனிவாசன் அவர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் ரூ.50,000/-ம் மற்றும் திரு.சீனிவாசன் அவர்களுடைய வாகனம் TN 96 H 3333 இருந்து தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.1,82,000/- ஆக மொத்தம் ரூ.2,45,000/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. எனவே வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட் பணிபுரியும் திரு.ரேணுகாம்பாள், இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், திரு.சண்முகம், கண்காணிப்பாளர், கொள்முதல் பிரிவு, திரு.நவீன்குமார், இளநிலை உதவியாளர், கொள்முதல் பிரிவு ஆகியோர் மேற்படி வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் பொருட்களை சப்ளை செய்யும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு அன்பளிப்பு என்ற பெயரில் லஞ்சமாக பணத்தையும் பரிசு பொருட்களையும் பெற்று கொண்டு தங்களுடைய பதவியை துஷ்பிரயோகம் செய்து நேர்மையற்ற வகையில் நடந்து வரும் மேற்படி அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திரு.சீனிவாசன், மேலாளர், ஜெயா சோப்ஸ் TamilNadu Government Co-operative Supplier Ponvandu Soap, நெ.126/4, புதுகிராமம், கோவில்பட்டி மெயின் டவுன், கோவில்பட்டி என்பவர் மேற்படி அரசு ஊழியர்களை லஞ்சம் பெற தூண்டி அன்பளிப்பாக லஞ்ச பணத்தையும் பொருட்களையும் கொடுத்த மேற்படி நபர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் 28.12.2021 அன்று மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் சோதனை நடவடிக்கைகள் குறித்த அசல் செயல்முறை, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பணம் ரூ.2,45,000/- ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். sd/- xxxxxx, 29.12.2021 அ.வாசுகி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்.

Madam,

Received the complaint on 29.12.2021 at 03.30 Hrs. and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.23/2021, u/s 7 and 12 of Prevention of Corruption Act 1988 as amended in the Prevention of Corruption (Amendment) Act 2018 on 29.12.2021 at 04.00 Hrs. Sd/-xxxxx 29/12/2021 (S.Vijay), Inspector of Police, V&AC, Vellore.

The original First Information Report is submitted to the Hon'ble Special Judge/Chief Judicial Magistrate, Vellore and copy of the First Information Report is sent to the officers concerned.

(S.VIJAY) 29/12/2021
INS/VGAC/VLR